1972 ஆகஸ்டு 9]

கோயம்புத்தூர் நகரத்தில் பேருந்துக் கட்டணங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 ஆகஸ்டிலிருந்து கோயம்புத்தூர் நகரத்தில் பேருந்துக் கட்டணங்கள் அதிகமாகியுள்ளதென்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் நகரப் பேருந்துப்பணிகள் அனைத்திற்கும் முன்னர் நிர்ணயிக்கப்பட்டிருந்த உயர் அளவு பேருந்துக் கட்டணத்திற்குப் பதிலாக, பேருந்துக்கட்டணம், முதல் கட்டண நிலைக்கு 10 காசு விதமும் அடுத்து வரும் ஒவ்வொரு கட்டண நிலைக்கும் 5 காசு விதமும் சீரான விதத்தில், 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் விதிக்கப்பட்டது. இந்த விதங்கள் 20-8-1971 முதற்கொண்டு கோயம்புத்தூரில் செயலுக்கு வந்துள்ளன.

Writing the name of places on all buses in English and Tamil.

* 26. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Transport be pleased to state whether there is a proposal to take steps to write the name of the places on all buses in English along with Tamil, for the convenience of the tourists from other States and abroad visiting Tamil Nadu?

பேருந்துகளில் ஊர்ப் பெயர்களை தமிழுடன் ஆங்கிலத்தில் எழுதுதல்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், தமிழ் நாட்டிற்கு வரும் பிரயாணிகளுக்கு உதவியாக எல்லாப் பேருந்துகளிலும் ஊர்ப் பெயர்களை தமிழுடன் ஆங்கிலத்திலும் எழுதச் செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேருந்துகளிலுள்ள ஊர்ப்பெயர்ப் பலவகைகளில், ஊர் பெயர்கள் தமிழிலும், தேவைப்பட்டால் ஆங்கிலத்திலும் எழுதி வைக்கப்படுவதற்கு, தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் ஊர்திகள் விதிகளின் 278-வது விதி வகை செய்கிறது. சென்னை மாநகரிலும், வெளியூர்களிலும் ஓடும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறையின் பேருந்துகள்

[1972 ஆகஸ்டு 9

அனைத்திலும் உள்ள ஊர்ப்பெயர் பலகைகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளன.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : வினாக்கள் முடிவடைந்தன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

1. வினாக்களுக்கு விடையளிப்பது குறித்து

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இன்றையதினம் வந்துள்ள கேள்விகளில் 3 கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் பதிலளிக்க வேண்டியவையாகும். இந்தக் கேள்விகள் பட்டியலில் இருந்தும் கூட அமைச்சர் வராமலிருப்பது உள்ளபடியே சபைக்கு மதிப்பளிப்பதாக இல்லை. அவருக்கு உடல் நலமில்லை யென்றால், முதலில் தெரிவித்திருந்தால் கூட நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சருக்கு உடல் நலக்குறைவு இன்றைக்கு ஏற்படும் என்று நேற்று முந்தாநாள் தெரியாது. அவர் வராததற்கு உடல் நலக் குறைவுதான் காரணம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இப்படிப் பல தடவை நடப்பதால் இன்றைய தினம் சொன்னேன்.

4. அறிவிப்புகள்.

(1) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு இரு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு வீதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டியுள்ளது என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப் பட்டுள்ளன.